**வனாத்தவில்லு பிரதேச சபை - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வனாத்தவில்லு பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வனாத்தவில்லு பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் வனாத்தவில்லு பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 900,000 செலவில் சந்தமாலி முன்பள்ளி பாடசாலையைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியின் பெறுமதி மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருப்பு மீதி ரூபா 568,070 ஆக இருந்த போதும் அது ரூபா 721,670 ஆக ரூபா 153,600 அதிகரித்து உரிய செலவினக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய காலாவதியான இருப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை | காலாவதியான இருப்புக்கள் தொடர்பாக நிதிப் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுக்கப்படும். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் 2/2019 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) சுற்றறிக்கை 05 மற்றும் 06 பந்திகள் | மதிப்பீட்டுப் பெறுமதியின்றியும், 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை திருத்தப்படாமலும் 2011 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்தின் பிரகாரம் பேரூந்து நிலையக் கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முறைமைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,664,207 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,606,618 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 3,344 | 2,355 | 3,554 | 2,258 | 2,793 | 2,035 | 718 | 3,376 |
| ii. | வாடகை | 119,479 | 72,945 | 61,191 | 12,768 | 107,626 | 70,540 | 70,130 | 897 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 727 | 446 | 458 | 358 | 479 | 471 | 469 | 371 |
| iv. | ஏனைய வருமானம் | 11,273 | 10,770 | 11,094 | 4,826 | 11,425 | 9,772 | 5,067 | 4,720 |
| | மொத்தம் | 134,823 | 86,516 | 76,297 | 20,210 | 122,323 | 82,818 | 76,384 | 9,364 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i. | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 948,742 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 535,698 அதாவது 47 சதவீதம் 04 வருடங்களை விட பழைய நிலுவை மீதியாகும். | அதனவரி நிலுவையில் ரூபா 191,825 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவை ரூபா 269,511 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 106,394 அதாவது 39 சதவீதம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவை மீதியாகும். | ஏக்கர் வரி நிலுவையில் ரூபா 850 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நீர் வரி நிலுவை ரூபா 470,526 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 52,491 மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவை மீதியாகும். | நீர் வரி மீதியில் ரூபா 18,355 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iv. | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய வியாபார வரி மீதி ரூபா 357,480 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான பழைய மீதியாகும். | வியாபார வரி நிலுவையில் ரூபா 1,080 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை**<br>2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை மற்றும் வாடகை ரூபா 954,898 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 167,744 தொகை 05 வருடங்களை விட பழைய நிலுவை மீதியாகும். | வாடகை நிலுவையில் ரூபா 204,072 மற்றும் கடை வாடகை நிலுவையில் ரூபா 67,667 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வாடகை செலுத்தாத வாடகையாளர்கள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணத்தில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 339,680 நிலுவை மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 18,500 நிலுவை மீதியும் காணப்பட்டது. | ஒரு வருமானப் பரிசோதகர் மாத்திரம் இருக்கின்றமையால் நிலுவை மீதியை அறவிடுதல் தாமதமடைந்துள்ளதுடன் நிலுவை மீதியை அறவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 250,000 பெறுமதியான ஹலர் இயந்திரத்தின் மோட்டார், ரூபா 96,237 பெறுமதியான கழிவு பொருட்களை கூறுகளாக்கும் இயந்திரத்தின் மோட்டார் மற்றும் வாகன சேவை நிலையத்தின் நிதியினை உள்ளடக்கி ரூபா 69,950 பெறுமதியான உபரகணங்கள் மற்றும் எண்ணெய் வகைகள் தொலைந்து 02 வருடங்களுக்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த போதிலும் விசாரணை நடாத்தி பொறுப்புவாய்ந்தவர்களை தீர்மானித்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | விசாரணை நடவடிக்கைகள் நடாத்தி பொறுப்பு வாய்ந்தவர்களைத் தீர்மானித்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான டிப்பர் வண்டியை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,552,500 தொகையில் உடன்படிக்கைத் தொகைக்கு தனியார் நிறுவனத்திற்கு 2024 யூலை 22 ஆந் திகதி கையளிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் வாகனம் பழுதுபார்த்து சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திகதியில் பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்து கையளிப்பதற்கு தவறியமையால் உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 02 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் ஆரம்பித்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,040,794 செலவில் எழுவன் குளம் நீர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 03 வருட காலம் கடந்திருந்த போதிலும் அதன் மூலம் குடிநீர் வழங்குவதற்கு சபை தவறியிருந்தது. | அந்த செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 4,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை விரைவாக அமுல்படுத்தி பொது மக்களின் குடி நீர் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2025 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய 02 கணக்குகளில் ரூபா 1,699,727 மீதி காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 492,596 மீதியும் காணப்பட்டது. இந்த தொகையை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தி யிருக்கவில்லை. | நானாவித கடன்பட்டோர் கணக்கின் மீதியில் ரூபா 585,640 மற்றும் வருமான உதவி கணக்கின் மீதயில் ரூபா 634,032.26 தற்போது அறவிடப்பட்டுள்ளது. | பெற வேண்டிய நிலுவை மீதிகளை விரைவாக அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 02 பொறுப்பு விடயங்களில் ரூபா 1,931,461 மீதியொன்று காணப் பட்டதுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 648,608 மீதி காணப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் நீண்டகாலமாகக் காணப்படுகின்ற இந்த கடன்கொடுத்தோர் மீதியின் இருப்பினை உறுதிப்படுத்தி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நானாவித கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 3,356,408 மற்றும் வேலைக் கடன் கொடுத்தோர் மீதயில் ரூபா 2,905,348 செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதித் தொகை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 539,528 செலவில் 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கரைத்தீவு உடற்பயிற்சி நிலையம் மற்றும் அதைப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,113,060 பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்களின் இருப்பு குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | போதியளவான தரப்பினர் வருகை தராமை மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் சில பழுதுபார்க்க வேண்டிய நிலையில் காணப்பட்டமையால் இந்த உபகரணங்கள் வணாத்துவில்லுவிற்கு கொண்டுவரும் வகையில் பயன்படுத்துவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 3,271,793 கிரயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் சபையின் ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக செயற்படும் நிலையில் காணப்படவில்லை. | கழிவுப் பொருள் நிலையத்திற்காக ஈடுபடுத்துவதற்கு ஊழியர்கள் போதியளவில் காணப்படாமையினால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | பதவியணியினர் முகாமைத்துவத்தை செய்வதன் மூலம் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை அமுல்படுத்தும் நிலைக்கு கொண்டு வந்து கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் உரிமை கோரப்படுகின்ற போதும் கையேற்கப்படாத 50 ஆதனங்கள் காணப்பட்டதுடன் அதில் மயான நிலங்கள், விளையாட்டு மைதானங்கள், முன்பள்ளிப் பாடசாலை, நூலகம், நீர் பம்பிக்கூடம் மற்றும் வாராந்த சந்தைகள் காணப்பட்டது. இந்த சொத்துக்களைக் கையேற்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணிக் கூறுகளைக் கையேற்பதற்காக செயலாளருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | சபை உரிமை கோராடுகின்ற ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மூன்றாம் தரத்தில் 01 பதவியும் இரண்டாம் தரத்தில் 07 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மிகையாகக் காணப்படுகின்ற நிறைவேற்று உத்தியோகத்தர் பதவி, ஆரம்பத் தரத்தில் 10 பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஊழியர் வெற்றிடயங்களின் காரணமாக சபையின் பல்வேறு பணிகளை நடாத்திச் செல்லல் இடையூறாக இருந்தது. | பதவியணியினர் அறிக்கை மூலம் உரிய வெற்றிடங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவருக்கு காலாண்டு ரீதியில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகையாகக் காணப்படுகின்ற நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியை எதிர்காலத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகை பதவியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் மூலம் சபையின் அணிகளை முறையான பிரகாரம் பேணிச்செல்லல் வேண்டும். |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்ற ரூபா 230,000 பெறுமதியான சபைக்குச் சொந்தமான டெக்டர் வண்டி மற்றும் ரூபா 50,000 பெறுமதியான மோட்டார் சைக்கிள் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | டெக்டர் வண்டியை விற்றுத் தீர்ப்பதற்காக உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் பங்குபற்றலுடன் மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிளை விற்றுத் தீர்ப்பதற்கான அங்கீகாரம் கோரி உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரிய ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற வாகனங்களை விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குதல், வீதி, வாகனம் மற்றும் கட்டிட பாராமரித்தல், காணி அளவிடல் போன்ற பணிகளுக்காக மீளாய்வாண்டில் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் செலவின விடயம் 21 இற்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 11,615,000 மொத்த நிதி ஏற்பாடும் உரிய பணிகளை நிறை வேற்றுவதற்காக பயன்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு குறித்த பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடு செய்யப்பட்ட செலவின விடயங்கள் உரிய காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சபையினால் மீளாய்வாண்டில் 05 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக 06 இலக்குகள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது. | புதிய நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதுடன் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற பயிற்சி போதியளவில் இன்மை மற்றும் அனுபவம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக நிலை பேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திரல் 2030 இன் பிரகாரம் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதற்கு வசதியீனமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |